செ.வெ.எண்: 908/2016 நாள்: 26.12.2016

**சுனாமி 12-ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி**
**கன்னியாகுமரியில் உள்ள சுனாமி நினைவிடத்தில்**
**மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ அவர்கள்,**
**மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயக்குமார் எம்.பி. அவர்கள்**
**முன்னிலையில்,**
**இன்று (26.12.2016) மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

2004-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ஆம் தேதி சுமத்ரா தீவுகளில் ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக இந்தியா, இலங்கை, இந்தோனேசஷியா உள்ளிட்ட நாடுகளில் கடலோர மாவட்டங்களில் சுனாமி பேரலை தாக்கியது.

தமிழகத்தில் கன்னியாகுமரி உள்ளிட்ட 13 கடலோர மாவட்டங்களும் பேரழிவை சந்தித்தன. ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர், வீடுகளை இழந்தனர். குமரி மாவட்டத்தில் குளச்சல், கொட்டில்பாடு, மணக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட மீனவ கிராமங்களை சார்ந்த மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டார்கள். அவர்களின் நலன்காக்க மத்திய, மாநில அரசுகள் சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி, பல்வேறு விதமான உதவிகளை வழங்கியது. மீனவர்கள் வாழ்வில் புத்துணர்வூட்டும் நடவடிக்கைகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 26-ஆம் தேதியன்று சுனாமி தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயக்குமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், சுனாமி 12-ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி கன்னியாகுமரி, காந்தி நினைவு மண்டபம் அருகில் அமைந்துள்ள சுனாமி நினைவிடத்தில் இன்று (26.12.2016) மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் திரு. ஏ.ஜஸ்டின் செல்வராஜ், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. அருளரசு, திரு.என்.என். ஸ்ரீஜயப்பன், திரு. நாஞ்சில் சந்திரன், திரு. கனகராஜன், திரு. சந்தையடி பாலகிருஷ்ணன், திரு. ரஜீஸ் ராஜ், திரு. வின்ஸ்டன், திரு.தம்பிதங்கம், செயல் அலுவலர் திரு. எம். சங்கர நாராயணன், உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.